முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி / அமர்வு நீதிமன்றம், ராமநாதபுரம்

அவர்களின்

FIRST INFORMATION REPORT — **TAMIL NADU POLICE**

முதல் தகவல் அறிக்கை (Under Section 173 BNSS) — **INTEGRATED INVESTIGATION FORM-I**

C 8364138

1. District : ராமநாதபுரம் PS: ராமநாதபுரம் Year: FIR No.: 07/26 Date: 4/7/2026.
மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு மு.த.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(ii) Act சட்டம்: மகளிர் தொடர்புச்சட்டம் Sections பிரிவுகள்: 7 of PC Amendment Act 2018.

(iii) Act சட்டம்: நிருத்தம் 2018. Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : Date to : 03-07-2026 மாலை 16.00
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை மறுநாள் 04-07-2026

Time Period : Time from : Time to : அதிகாலை 01.00 மணி வரை
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை

(b) Information Received at PS. Date : Time : 04-07-2026 மாலை 16.00 மணி
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்

(c) General Diary Reference : Entry No(s) Time :
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Vol - I நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form : எழுத்து மூலமாக.
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: சுமார் 4 கி.மீ தெற்கில்
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்

Beat Number : (b) Address : பேருந்து நிலையம், ராமநாதபுரம்.
முறைக் காவல் எண் முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : M. இராஜசேகரன் (b) Father's/ Husband's Name : தேவேந்திரன்
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : (d) Nationality : (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு 46/2026 நாட்டினம் இந்தியன் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : DSP (g) Address : மாவட்ட குற்றம் மற்றும் புலனாய்வு அலுவலகம்
தொழில் முகவரி ராமநாதபுரம், ராமநாதபுரம் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

— மேல் 12ல் தெரிவிக்கப்பட்டுள்ளது —

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

— தாமதம் ஏதுமில்லை. —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

—

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

—

எதிரிகளின் விபரம்:-

1) திரு.பவித்ரன், வயது 32/2026, த/பெ.ஸ்ரீதரன், RR சேதுபதி நகர், இராமநாதபுரம், இராமநாதபுரம் மாவட்டம், 2) திரு.ரா.சந்துரு, வயது 30/2026, த/பெ ராமன், வருவாய் உதவியாளர், இராமநாதபுரம் நகராட்சி, இராமநாதபுரம் மாவட்டம். வீட்டு முகவரி:- 7/230, MGR நகர், சக்கரக்கோட்டை, இராமநாதபுரம், 3).திரு.வ.கார்த்திகேயன், வயது 52/2026, த/பெ வடிவேல், வருவாய் ஆய்வாளர், இராமநாதபுரம் நகராட்சி, இராமநாதபுரம் மாவட்டம். வீட்டு முகவரி:- 7/680, டாக்டர் APJ அப்துல்கலாம் நகர், சக்கரக்கோட்டை, இராமநாதபுரம், 4) திரு.வே.முனீஸ்வரன், வயது 37/2026, த/பெ வேலுச்சாமி, வருவாய் உதவியாளர், இராமநாதபுரம் நகராட்சி, இராமநாதபுரம் மாவட்டம். வீட்டு முகவரி:- 83, KMC காலனி, கணேஷபுரம் கிழக்கு, காரைக்குடி, சிவகங்கை மாவட்டம், 5).திரு.கரிஷிகேசவன், வயது 47/2026, த/பெ கணேசன், வருவாய் உதவியாளர், இராமநாதபுரம் நகராட்சி, இராமநாதபுரம் மாவட்டம். வீட்டு முகவரி:- 12/3, கிருஷ்ணா நகர் 1வது தெரு, பட்டிணம்காத்தான், இராமநாதபுரம் மற்றும் 6) திரு.க.ஜெயக்குமார், வயது 33/2026, த/பெ.கண்ணன், தற்காலிக தொழில்நுட்ப உதவியாளர், இராமநாதபுரம் நகராட்சி, இராமநாதபுரம் மாவட்டம். வீட்டு முகவரி:- 2/42, கம்பர் கோவில் தெரு, நாட்டரசன்கோட்டை, சிவகங்கை மாவட்டம்

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு(கள்) [illegible] குற்றமாகும் வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
B. இராமசுப்பர்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும் நேரமும் 04-07-2026 at 18.00 hrs.

Name: பெயர் .....
Rank: நிலை .....No. எண்

இராமநாதபுரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு குற்ற எண்.07/2026 u/s 7 of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018 முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி:-

சமர்ப்பிக்கிறேன் – இன்று 04.07.2026ம் தேதி மாலை 16.00 மணிக்கு இராமநாதபுரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு காவல்துணை கண்காணிப்பாளர் திரு.மு.இராமச்சந்திரன் அவர்கள் 03.07.2026ம் தேதி மாலை 16.00 மணி முதல் 04.07.2026ம் தேதி அதிகாலை 01.00 மணிவரை இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரம் நகராட்சி அலுவலகத்தில் நடத்தப்பட்ட திடீர் சோதனை சம்பந்தமான அறிக்கை, பதிவு செய்யப்பட்ட வாக்குமூலங்கள், கைப்பற்றப்பபட்ட மொத்த பணம் ரூ. 3,66,000/- ஆகியவற்றுடன் கொடுத்த எழுத்து மூலமான புகாரைப் பெற்று இராமநாதபுரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு குற்ற எண் 07/2026 பிரிவு 7 ஊழல் தடுப்பு (திருத்தம்) சட்டம் 2018 ன்படி 04.07.2026 ம் தேதி மாலை 17.00 மணிக்கு வழக்குபதிவு செய்தேன். வாதியின் புகார் பின்வருமாறு:- அனுப்புநர் திரு.மு.இராமச்சந்திரன், காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு, இராமநாதபுரம். பெறுநர் திரு.மு.குமரேசன், காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு, இராமநாதபுரம். அய்யா, பொருள்:- திடீர்சோதனை - 03.07.2026ம் தேதி 16.00 மணி முதல் 04.07.2026ம் தேதி அதிகாலை 01.00 மணிவரை இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரம் நகராட்சி அலுவலகத்தில் திடீர் சோதனை நடத்தப்பட்டது – மேல் நடவடிக்கை எடுக்க கோருவது - தொடர்பாக. பார்வை:- எனது திடீர் சோதனை அறிக்கை, நாள்: 04.07.2026. இராமநாதபுரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவிற்கு 03.07.2026ம் தேதியன்று இராமநாதபுரம் நகராட்சி அலுவலகத்தில் பணிபுரியும் அதிகாரிகள் மற்றும் அலுவலர்கள் பொதுமக்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களிடமிருந்து லஞ்சமாக பணம் பெற்றுக்கொண்டு பணிகள் செய்வதாக கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில், 03.07.2026ம் தேதி 16.00 மணிக்கு செயல்முறை· நடவடிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள அலுவலர் முன்னிலையில் இராமநாதபுரம் நகராட்சி அலுவலகத்திற்கு சென்று அங்கு ஆணையாளர் திருமதி.அஜீதா பர்வீன் அவர்கள் ஆஜரில் இல்லாததால், அங்கு பணியில் இருந்த நகராட்சி சுகாதார அலுவலர் திரு.முகம்மது இக்பால் அவர்களிடம் அடையாள அட்டைகளை காண்பித்து திடீர் சோதனை விபரத்தைக்கூறி திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி அலுவலகமானது இராமநாதபுரம் வண்டிக்கார தெருவில் தாலுகா

அலுவலகத்திற்கு மேற்கே தெற்கு பார்த்த நுழைவு வாசலுடன் அமைந்துள்ளது. நுழைவு வாயிலின் வளாகத்தில் கிழக்கு பக்கம் மேற்கு பார்த்த வாசலுடன் கட்டுப்பாட்டு அறை, ஆலோசனை கூடம், நகரமைப்பு அலுவலர்கள் மற்றும் சர்வேயர் அறையும், மேற்படி கட்டிடத்திற்கும் வடக்கே நகர்மன்ற தலைவர் அறையும் உள்ளது. நுழைவு வாயிலின் வளாகத்தில் மேற்கே பொது சுகாதார பிரிவும் உள்ளது. நகராட்சி அலுவலகத்தின் பிரதான கட்டிடமானது தெற்கு பார்த்த வாசலுடன் அமைந்துள்ளது. மேற்படி கட்டிடத்திற்குள் மேற்கு பக்கம் வரி வசூல் மையமும், அதன் வடக்கே ஆணையாளர் அறையும், நகராட்சி பொறியாளர் அறையும், பொறியியல் பிரிவு அறையும், நகர்நல அலுவலர் அறையும், கழிப்பறையும் தனித்தனியே அமைந்துள்ளது. மேலும் மேற்படி கட்டிடத்தின் கிழக்கு பக்கம் முதல் தளத்திற்கு செல்லும் மாடிப்படியும், அதன் வடக்கே புத்தக வைப்பறையும், பொதுப்பிரிவு அறையும், வருவாய்பிரிவு அறையும் தனித்தனியே அமைந்துள்ளது. அந்த அலுவலக வளாகத்தில் இருந்த நபர்கள் வெளியே செல்லாமலும் வெளியில் இருந்து யாரும் மேற்படி இடத்திற்குள் உள்ளே வராமல் இருக்கும் வண்ணம் கண்காணிக்க என்னுடன் வந்த போலீஸ் பார்ட்டியினரை நியமித்தேன். மேற்படி சோதனையின்போது, அலுவலகத்தின் வரி வசூல் மைய அறையை சோதனை செய்தபோது அங்கு கவுண்டர் நம்பர் 1ல் திரு.அந்தோணிசாமி, இளநிலை உதவியாளர் மற்றும் காசாளர் என்பவரிடம் ஏதேனும் பணம் வைத்திருக்கிறீர்களா என கேட்டதற்கு அவரது வலது பக்க பேண்ட் பாக்கெட்டில் வைத்திருந்த பணம் ரூ.1130/-ஐ எடுத்து ஆஜர் செய்தவரிடம் மேற்படி பணம் குறித்து விசாரிக்க அப்பணம் அவரது கைச்செலவிற்காக வைத்திருந்ததாக கூறினார். எனவே அப்பணம் ரூ.1,130/- அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேலும் ரூ.51,171/- மேற்படி கவுண்டரில் பொதுமக்களிடமிருந்து வரிப்பணம் 03.07.2026ம் தேதி வசூல் செய்துள்ளதாக கூறினார். 03.07.2026ம் தேதி வரி ரசிதாக போடப்பட்ட தொகையும், வசூல் செய்யப்பட்ட தொகையும் சரியாக இருந்ததால் மேற்படி பணம் ரூ.51,171/- அரசு கணக்கில் செலுத்துவதற்காக திரும்ப அவரிடமே ஒப்படைக்கப்பட்டது. மேலும் கவுண்டர் எண் 2ல் இருந்த திருமதி.ரேணுகா, இளநிலை உதவியாளர் என்பவரை பெண் காவல் ஆய்வாளர் முன்னிலையில் பணம் வைத்திருக்கிறீர்களா என கேட்டதற்கு அவரது மணிப்பர்சில் வைத்திருந்த பணம் ரூ.240/-ஐ எடுத்து ஆஜர் செய்தவரிடம் மேற்படி பணம் குறித்து விசாரிக்க அப்பணம் அவரது கைச்செலவிற்காக வைத்திருந்ததாக கூறினார். எனவே அப்பணம் ரூ.240/- அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. 03.07.2026ம் தேதி வரி ரசிதாக போடப்பட்ட தொகை ரூ.2,56,752/- என்றும்,

5

ஆனால் தற்போது வசூல் செய்யப்பட்டு கையிருப்பில் உள்ள தொகை ரூ.2,30,560/- என்றும், ரூ.26,192/- குறைவாக உள்ளது என்றும் தெரிய வந்தது. மேற்படி தொகைக்கு அவரிடம் விளக்கம் கேட்க, மேற்படி பில்கள் வருவாய் உதவியாளர்களான திரு.ரிஷிகேசவன், திரு.முனீஸ்வரன் மற்றும் திரு.சந்துரு ஆகியோர் பொதுமக்களிமிருந்து வசூல் செய்து என்னிடம் ஒப்படைக்க வேண்டி உள்ளதாக தெரிவித்தார். எனவே வசூல் செய்யப்பட்ட தொகை ரூ.2,30,560/- அரசு கணக்கில் செலுத்துவதற்காக திரும்ப அவரிடமே ஒப்படைக்கப்பட்டது. மேலும் அந்த வரி வசூல் மையத்தில் நின்று கொண்டிருந்த திரு.பவித்ரன், வயது 32/2026, த/பெ ஸ்ரீதரன், RR சேதுபதி நகர், இராமநாதபுரம் என்பவரிடம் அரசு சாட்சி முன்னிலையில் பணம் ஏதேனும் வைத்திருக்கிறீர்களா என கேட்டதற்கு அவரது கையில் வைத்திருந்த மஞ்சள் சிவப்பு நிறம் கலந்த கும்பாபிஷேக கைப்பையில் பணம் ரூ.3,14,000/-ஐ இருப்பதாக கூறி ஆஜர் செய்தார். அவரிடம் மேற்படி பணம் குறித்து விசாரிக்க முதலில் இராமநாதபுரம் புதிய பேருந்து நிலைய வளாகத்திற்குள் உள்ள கடை எண்.23 ஐ மறு ஏலம் எடுப்பதற்காக 12 மாத வாடகை வைப்புத்தொகை மற்றும் 25% கூடுதல் தொகையுடன் நகராட்சி கருவூலத்தில் செலுத்த வந்ததாக கூறினார். பின்னர் அவர் வைத்திருந்த ஆவணங்களை பார்வையிட்டதில் மாரிக்கண்ணு என்பவரது பெயரில் ஆவணங்கள் இருந்தது சம்மந்தமாக அவரிடம் விசாரிக்க, உறவினர் மாரிக்கண்ணு பெயரில் மறு ஏலம் எடுப்பது சம்மந்தமாக வந்ததாக கூறினார். பின்பு வெளியில் நின்று கொண்டிருப்பதாக கூறிய மாரிக்கண்ணு என்பவரை அழைத்து விசாரணை செய்ய தனது பெயரில் பவித்ரனுக்கு மாற்றுத்திறனாளிகள் என்ற முன்னுரிமை அடிப்படையில் மறு ஏலம் எடுப்பதாக கூறினார். மேலும் திரு.பவித்ரன் என்பவர் இராமநாதபுரம் புதிய பேருந்து நிலைய வளாகத்தில் ஏலத்தில் விடப்பட்ட கடை எண்.86 மற்றும் 87 ஐ தான் வாடகைக்கு எடுத்து தலா ரூ.40,000/- மினி மிஸ்டர் என்ற பெயரில் பேக்கரி நடத்தி வருவதாகவும், தற்போது மறு ஏலத்தில் எடுக்க வந்த கடையிலும் நான் பேக்கரி நடத்துவதற்காக கேட்டு வந்ததாகவும் கூறினார். மேற்படி நபர் ஏற்கனவே பேருந்து நிலைய வளாகத்தில் 2 கடைகள் நடத்தி வருவதாலும், தற்போது மறு ஏலம் எடுப்பதற்காக கொண்டு வந்த பணம் என்று கூறியதாலும், மாற்றுத்திறனாளிகள் என்ற முன்னுரிமை அடிப்படையில் தவறான தகவலை கொடுத்து ஏலம் எடுக்க முற்பட்டதாலும், மேற்படி முறைகேடான வழியில் கடையை ஏலம் எடுப்பதில் இவ்வலுவலகத்தில் பணிபுரியும் அதிகாரிகளுக்கு தொடர்பு இருக்கலாம் என்ற முகாந்திரத்தின் அடிப்படையில் இது குறித்து மேலும் விசாரிக்க மேற்படி பணம் ரூ.3,14,000/-ஐ கைப்பற்றினேன். மேலும் அவரிடமிருந்து

மாரிக்கண்ணு மறு ஏலம் எடுப்பது தொடர்பான பக்கம் 1 முதல் 60 வரையிலான கோப்பை கைப்பற்றினேன். மேலும் இது சம்பந்தமாக அவரை விசாரித்து ஒரு வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. மேலும் மேற்படி சோதனையின்போது, அலுவலகத்தின் பொறியியல் பிரிவு அறையை சோதனை செய்தபோது, அந்த அறையில் ஆஜரில் இருந்தவர்களை சோதனை செய்ய திரு.மணிமாறன், உதவி பொறியாளரிடம் ரூ.130/-ம், திருமதி.நிவேதிதா, பணி மேற்பார்வையாளரிடம் ரூ.990/-ம் மற்றும் திரு.இளங்கோ, தற்காலிக பணியாளர் ரூ.5,500/-ம் வைத்திருந்தவர்களிடம் மேற்படி பணம் குறித்து விசாரிக்க அப்பணம் அவர்களது கைச்செலவிற்காக கொண்டு வந்த பணம் என்று கூறியதாலும், மேற்படி பணம் குறித்து விசாரணை செய்து சரியான முகாந்திரம் இருந்ததால் அப்பணம் அவர்களிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேலும் திரு.சரவணக்குமார், சுகாதார ஆய்வாளர், செல்வி.கௌரி சித்ரா, பணி ஆய்வாளர் மற்றும் திரு.முருகன், பணி மேற்பார்வையாளர் ஆகியோரிடம் பணம் ஏதும் இல்லை. மேலும் மேற்படி சோதனையின்போது, அலுவலகத்தின் நகர்நல அலுவலர் அறையை சோதனை செய்தபோது, அந்த அறையில் ஆஜரில் இருந்தவர்களை சோதனை செய்ய திரு.பெர்லின், அலுவலக உதவியாளரிடம் ரூ.40/-ம், பொதுப்பிரிவைச் சேர்ந்த திரு.விஸ்வநாதன், இளநிலை உதவியாளரிடம் ரூ.30/-ம், திருமதி.அகிலா, தற்காலிக கணினி இயக்குபவரிடம் ரூ.200/-ம், திருமதி.ஜெயசுபிக்க்ஷா, தற்காலிக கணினி இயக்குபவரிடம் ரூ.20/-ம், திருமதி.ஜெரின், பயிற்சி சுகாதார ஆய்வாளரிடம் ரூ.300/-ம் வைத்திருந்தவர்களிடம் மேற்படி பணம் குறித்து விசாரிக்க அப்பணம் அவர்களது சொந்த செலவிற்காக கொண்டு வந்த பணம் என்று கூறியதால் அப்பணம் அவர்களிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேலும் திருமதி.ராசிகாதேவி, தற்காலிக மேற்பார்வையாளர் மற்றும் திரு.முகம்மது இக்பால், சுகாதார அலுவலர் ஆகியோரிடம் பணம் ஏதும் இல்லை. மேலும் மேற்படி சோதனையின்போது, அலுவலகத்தின் பொதுப்பிரிவு அறையை சோதனை செய்தபோது, அந்த அறையில் ஆஜரில் இருந்தவர்களை சோதனை செய்ய திருமதி.லச்சய பிரபா, தட்டச்சரிடம் ரூ.4,000/-ம், திருமதி.மணிமேகலா, தற்காலிக காசாளரிடம் ரூ.70/-ம், திருமதி.சிந்துஜா, உதவியாளரிடம் ரூ.650/-ம், திரு.ஸ்ரீஜேஸ்குமார், சுகாதார ஆய்வாளரிடம் ரூ.420/-, திருமதி.சுதா, களப்பணி உதவியாளரிடம் ரூ.250/-ம், திருமதி.சாந்தி, உதவியாளரிடம் ரூ.140/-, திருமதி.கௌசல்யா, தற்காலிக தட்டச்சரிடம் ரூ.250/-ம், திருமதி.ஸ்டெல்லாமேரி, வருவாய் உதவியாளரிடம் ரூ.100/-ம், திருமதி.ஐஸ்வர்யா, உதவியாளரிடம் ரூ.3.500/-ம் வைத்திருந்தவர்களிடம் மேற்படி பணம் குறித்து விசாரிக்க

அப்பணம் அவர்களது சொந்த செலவிற்காக கொண்டு வந்த பணம் என்று கூறியதாலும், மேற்படி பணம் குறித்து விசாரணை செய்து சரியான முகாந்திரம் இருந்ததால் அப்பணம் அவர்களிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேலும் அங்கிருந்த திரு.சந்துரு, வருவாய் உதவியாளர் என்பவரிடம் பணம் ஏதேனும் வைத்திருக்கிறீர்களா என நான் கேட்டதற்கு அவ்வாறு ஏதுமில்லை என்று சொன்னார். அதனைத்தொடர்ந்து அவரது சம்மதத்துடன் அவரை சோதனை செய்ய அவரது பேண்ட் பாக்கெட்டில் ரூபாய் 7,000/- இருந்தது. அது பற்றி அவரிடம் கேட்க, முன்னுக்கு பின் முரணாக கூறினார். அவர் கூறிய விளக்கம் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லாததால் மேற்படி பணம் ரூ.7,000/-ஐ கைப்பற்றினேன். மேலும் இது சம்பந்தமாக அவரை விசாரித்து ஒரு வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. மேலும் மேற்படி சோதனையின்போது, அந்த அலுவலகத்தின் வரண்டாவில் நின்று கொண்டு இருந்த வருவாய் பிரிவைச் சேர்ந்த திரு.கார்த்திகேயன், வருவாய் ஆய்வாளர் என்பவரிடம் பணம் ஏதேனும் வைத்திருக்கிறீர்களா என நான் கேட்டதற்கு அவ்வாறு ஏதுமில்லை என்று சொன்னார். அதனைத்தொடர்ந்து அவரது சம்மதத்துடன் அவரை சோதனை செய்ய அவரது பேண்ட் பாக்கெட்டில் ரூபாய் 28,600/- இருந்தது. அது பற்றி அவரிடம் கேட்க, முன்னுக்கு பின் முரணாக கூறினார். அவர் கூறிய விளக்கம் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லாததால் மேற்படி பணம் ரூ.28,600/-ஐ கைப்பற்றினேன். மேலும் அவரது சம்மதத்துடன் அவரது அலைபேசி எண் 9442044756 கொண்ட ஜீபே செயலியை சோதனை செய்ததில் கடந்த 2023ம் ஆண்டு முதல் தற்போது வரை தோரயமாக ரூ.25,00,000/- வரை பல்வேறு நபர்களிடமிருந்து பணம் வரவு வைக்கப்பட்டுள்ள விபரம் தெரிய வந்தது. மேலும் மேற்படி அலைபேசி அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேலும் இது சம்பந்தமாக அவரை விசாரித்து ஒரு வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. மேலும் மேற்படி சோதனையின்போது, அந்த அலுவலகத்தின் வரண்டாவில் நின்று கொண்டு இருந்த வருவாய் பிரிவைச் சேர்ந்த திரு.முனீஸ்வரன், வருவாய் உதவியாளர் என்பவரிடம் பணம் ஏதேனும் வைத்திருக்கிறீர்களா என நான் கேட்டதற்கு அவ்வாறு ஏதுமில்லை என்று சொன்னார். அதனைத்தொடர்ந்து அவரது சம்மதத்துடன் அவரை சோதனை செய்ய அவரது பேண்ட் பாக்கெட்டில் ரூபாய் 4,000/- இருந்தது. அது பற்றி அவரிடம் கேட்க, முன்னுக்கு பின் முரணாக கூறினார். அவர் கூறிய விளக்கம் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லாததால் மேற்படி பணம் ரூ.4,000/-ஐ கைப்பற்றினேன். மேலும் இது சம்பந்தமாக அவரை விசாரித்து ஒரு வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. மேலும் மேற்படி சோதனையின்போது, அந்த அலுவலகத்தின் வரண்டாவில் நின்று கொண்டு இருந்த வருவாய்

பிரிவைச் சேர்ந்த திரு.ரிஷிகேசவன், வருவாய் உதவியாளர் என்பவரிடம் பணம் ஏதேனும் வைத்திருக்கிறீர்களா என நான் கேட்டதற்கு அவ்வாறு ஏதுமில்லை என்று சொன்னார். அதனைத்தொடர்ந்து அவரது சம்மதத்துடன் அவரை சோதனை செய்ய அவரது பேண்ட் பாக்கெட்டில் ரூபாய் 7,000/- இருந்தது. அது பற்றி அவரிடம் கேட்க, முன்னுக்கு பின் முரணாக கூறினார். அவர் கூறிய விளக்கம் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லாததால் மேற்படி பணம் ரூ.7,000/-ஐ கைப்பற்றினேன். மேலும் இது சம்பந்தமாக அவரை விசாரித்து ஒரு வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. மேலும் மேற்படி சோதனையின்போது, அந்த அலுவலகத்தின் வரண்டாவில் நின்று கொண்டு இருந்த பொறியியல் பிரிவைச் சேர்ந்த திரு.ஜெயக்குமார், தற்காலிக தொழில்நுட்ப உதவியாளர் என்பவரிடம் பணம் ஏதேனும் வைத்திருக்கிறீர்களா என நான் கேட்டதற்கு அவ்வாறு ஏதுமில்லை என்று சொன்னார். அதனைத்தொடர்ந்து அவரது சம்மதத்துடன் அவரை சோதனை செய்ய அவரது பேண்ட் பாக்கெட்டில் ரூபாய் 5,400/- இருந்தது. அது பற்றி அவரிடம் கேட்க, முன்னுக்கு பின் முரணாக கூறினார். அவர் கூறிய விளக்கம் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இல்லாததால் மேற்படி பணம் ரூ.5,400/-ஐ கைப்பற்றினேன். மேலும் இது சம்பந்தமாக அவரை விசாரித்து ஒரு வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. இந்நிலையில் நகராட்சி அலுவலகம் ஆஜராகுமாறு நான் கேட்டுக்கொண்டதின்பேரில் நகராட்சி அலுவலகத்திற்கு சுமார் 21.00 மணிக்கு ஆஜரான திருமதி.அஜிதா பர்வீன், நகராட்சி ஆணையாளர், இராமநாதபுரம் நகராட்சி அவர்களிடம் நான் விசாரிக்க, தான் 2023 மே மாதம் முதல் இவ்வலுவலகத்தில் ஆணையாளராக பணிபுரிந்து வருவதாகவும், கடந்த 10 வருடங்களாக 9092295557 என்ற அலைபேசி எண்ணை பயன்படுத்தி வருவதாகவும், தனக்கு ஜீபே இருப்பதாகவும், தனக்கு IOB, பண்ரூட்டி, IOB சென்னை தலைமை செயலக கிளை மற்றும் ICICI சிதம்பரம் கிளை ஆகிய வங்கிகளில் கணக்கு வைத்திருப்பதாகவும், தனது கணவர் பெயர் அஹமது இப்ராகிம் என்றும், அவர் Business செய்து வருவதாகவும், அவரது அலைபேசி எண்கள் 8012758255 மற்றும் 9080828700 என்றும், அலைபேசியில் ஜீபே மற்றும பேடீம் வைத்திருப்பதாகவும், அவருக்கு TMB பண்ரூட்டி கிளை கணக்கு எண்.195100050300668 மற்றும் ICICI கிளை கணக்கு எண்.61510512421 இருப்பதாகவும் தெரிவித்தார். மேலும் 03.07.2026ம் தேதி மதியம் சுமார் 12.30 மணியளவில் தான் அலுவலகத்திலிருந்தபோது பவித்ரன் என்பவர் மாரிக்கண்ணு என்பவரது பெயரில் மறு ஏலம் சம்மந்தமான விபரம் கேட்டதாகவும் கூறினார். மேலும் நகராட்சி வளாகத்தினுள் சந்தேகத்திற்கு இடமான வகையில் நின்று

9

கொண்டிருந்த வாகனங்களை முழுமையாக சோதனை செய்ததில் பணம் ஏதும் கைப்பற்றப்படவில்லை. மேலும் இவ்வலுவலகத்தில் கொடிநாள் பதிவேடு மற்றும் பாக்கெட் மணி ரிஜிஸ்டர் ஆகியவை பராமரிக்கப்படுகின்றதா என நகராட்சி ஆணையாளர் திருமதி.அஜிதா பர்வீன் அவர்களிடம் கேட்டதற்கு அவைகள் பராமரிக்கப்படவில்லை என விபரம் தெரிவித்தார். மேலும் நான் கேட்டுக்கொண்டதற்கிணங்க 1) இராமநாதபுரம் நகராட்சி அலுவலக பொதுப்பிரிவு, பொறியியல் பிரிவு, வருவாய் பிரிவு மற்றும் பொது சுகாதார பிரிவு ஆகியவற்றின் 2026ம் ஆண்டிற்கான வருகை பதிவேட்டின் நகல்கள், 2).திரு.மாரிக்கண்ணு என்பவரது விண்ணப்ப நகல் கோப்பு (பக்கம் 1 முதல் 12 வரை) மற்றும் 3) 03.07.2026ம் தேதி திரு.அந்தோணிசாமி, இளநிலை உதவியாளர் மற்றும் காசாளர் என்பவரால் கவுண்டர் நம்பர் 1ல் வரி வசூல் செய்யப்பட்டதற்கான அறிக்கை (பக்கம் 1 முதல் 16 வரை) மற்றும் 4) 03.07.2026ம் தேதி திருமதி.ரேணுகா, இளநிலை உதவியாளர் என்பவரால் கவுண்டர் நம்பர் 2ல் வரி வசூல் செய்யப்பட்டதற்கான அறிக்கை (பக்கம் 1 முதல் 16 வரை) ஆகியவற்றை நகராட்சி ஆணையாளர் திருமதி.அஜிதா பர்வீன் அவர்கள் ஆஜர்படுத்த விசாரணைக்காக கைப்பற்றினேன். மேற்படி திடீர் சோதனை 03.07.2026ம் தேதி 03.07.2026ம் தேதி 16.00 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு 04.07.2026ம் தேதி அதிகாலை 01.00 மணிக்கு முடிக்கப்பட்டது. மேற்படி சோதனையில் கணக்கு காட்ட இயலாத பணம் மொத்தம் ரூ.3,66,000/- அரசு சாட்சி முன்னிலையில் கைப்பற்றினேன். எனவே, இந்தசோதனையின்அடிப்படையில் 1) திரு.பவித்ரன், வயது 32/2026, த/பெ.ஸ்ரீதரன், RR சேதுபதி நகர், இராமநாதபுரம், இராமநாதபுரம் மாவட்டம், 2) திரு.ரா.சந்துரு, வயது 30/2026, த/பெ ராமன், வருவாய் உதவியாளர், இராமநாதபுரம் நகராட்சி, இராமநாதபுரம் மாவட்டம். வீட்டு முகவரி:- 7/230, MGR நகர், சக்கரக்கோட்டை, இராமநாதபுரம், 3).திரு.வ.கார்த்திகேயன், வயது 52/2026, த/பெ வடிவேல், வருவாய் ஆய்வாளர், இராமநாதபுரம் நகராட்சி, இராமநாதபுரம் மாவட்டம். வீட்டு முகவரி:- 7/680, டாக்டர் APJ அப்துல்கலாம் நகர், சக்கரக்கோட்டை, இராமநாதபுரம், 4) திரு.வே.முனீஸ்வரன், வயது 37/2026, த/பெ வேலுச்சாமி, வருவாய் உதவியாளர், இராமநாதபுரம் நகராட்சி, இராமநாதபுரம் மாவட்டம். வீட்டு முகவரி:- 83, KMC காலனி, கணேஷபுரம் கிழக்கு, காரைக்குடி, சிவகங்கை மாவட்டம், 5).திரு.க.ரிஷிகேசவன், வயது 47/2026, த/பெ கணேசன், வருவாய் உதவியாளர், இராமநாதபுரம் நகராட்சி, இராமநாதபுரம் மாவட்டம். வீட்டு முகவரி:- 12/3, கிருஷ்ணா நகர் 1வது தெரு, பட்டிணம்காத்தான், இராமநாதபுரம் மற்றும் 6) திரு.க.ஜெயக்குமார், வயது 33/2026, த/பெ.கண்ணன், தற்காலிக தொழில்நுட்ப உதவியாளர், இராமநாதபுரம் நகராட்சி,

இராமநாதபுரம் மாவட்டம். வீட்டு முகவரி:- 2/42, கம்பர் கோவில் தெரு, நாட்டரசன்கோட்டை, சிவகங்கை மாவட்டம் ஆகியோர்கள் முறைகேடான செயல்களில் ஈடுபட்டதற்கான முகாந்திரம் இருப்பது தெரியவருகிறது. எனவே, மேற்கண்ட நபர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுப்பதற்கு திடீர்சோதனையின்போது மேற்படி நபர்களிடமிருந்து கைப்பற்றப்பட்ட கணக்கில் காட்ட இயலாத மொத்தப்பணம் ரூபாய் 3,66,000/-, பதிவு செய்யப்பட்ட வாக்குமூலங்கள் மற்றும் திடீர் சோதனை சம்மந்தமான எனது அறிக்கை ஆகியவற்றை உடனடியாக வழக்குபதிவு செய்து உரிய நடவடிக்கை எடுக்க உயர் அதிகாரிகளின் ஒப்புதல் பெற்று தங்களிடம் ஒப்படைக்கிறேன். (ஒப்பம்) மு.இராமச்சந்திரன், காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு, இராமநாதபுரம். 04.07.2026. மேலும், உயர் அதிகாரிகளின் வாய்மொழி ஒப்புதல் பெற்று மேற்படி எதிரிகள் மீது இன்று 04.07.2026ம் தேதி மாலை 17.00 மணிக்கு இராமநாதபுரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு குற்ற எண் 07/2026 u/s 7 of the Prevention of Corruption Act, 1988 as amended in 2018-ன்படி வழக்கு பதிவு செய்யப்பட்டது. பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் சோதனையின் போது தயார் செய்யப்பட்ட செயல்முறை நடவடிக்கையின் அசல், எதிரிகளின் வாக்குமூலங்கள் ஆகியவற்றை மாண்புமிகு முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றம் இராமநாதபுரம் மாவட்டம் அவர்களுக்கும் மற்ற நகல்களை உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கப்படுகிறது.

4.7.26

காவல் ஆய்வாளர்
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு
இராமநாதபுரம்.